2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

(xii) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 268(i)–வது விதியின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்குக் கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. கி. அசோக்குமார்
2. திரு. T.K. அமுல் கந்தசாமி
3. திரு. ச. அரவிந்த் ரமேஷ்
4. திருமதி கு. சித்ரா
5. திரு. எஸ். தங்கப்பாண்டியன்
6. திருமதி ஆ. தமிழரசி
7. திரு. S. பழனி நாடார்
8. திரு. K.A. பாண்டியன்
9. திரு. இரா. மாணிக்கம்
10. டாக்டர் A.R.R. ரகுராமன்
11. திருமதி ம. வரலட்சுமி

பேரவை விதி 268(ii)–ன்படி, திருமதி ஆ. தமிழரசி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(ஈ) அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழு மற்றும் அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்படியாக அமைக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு (Academic Council) பணியாற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சபா. இராசேந்திரன் மற்றும் டாக்டர் இரா. இலட்சுமணன் ஆகியோரிடமிருந்தும் மற்றும் அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் (Syndicate) பணியாற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்களிடமிருந்தும் முறையாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன.*

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்த பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலமாகும். அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 12–9–2024 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதினாறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாம் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் 9–1–2023 அன்று தொடங்கி 13–1–2023 வரையிலும் மற்றும் இரண்டாம் கூட்டம் 20–3–2023 முதல் (இன்று) 21–4–2023 வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இக்கூட்டத்தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	– **26** நாட்கள்
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள்	– **8** நாட்கள்
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	– **142** மணி **30** நிமிடங்கள்

9–1–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.